விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 297 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 25 வியாழக்கிழமை (12.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

ஜெய்சங்கருடன் ரணில் விசேட சந்திப்பு

## 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

இந்திய அரசின் நிதிப்பங்களிப்புடன் மலையகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நேற்று 15

## ஜெய்சங்கரை சந்திக்க அனுமதி தாருங்கள்

தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்திப்பதற்கு தமக்கு அனுமதி வழங்குமாறு தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பல்வேறு தரப்பினரை 15

சிறுமியின் கை துண்டிப்பு

## வைத்தியர், தாதியர்களை உடன் கைது செய்க

நீதிமன்றில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமி வைஷாலியின் கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் மூன்று பேரை உடனடியாக கைது செய்யுமாறு சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் கோரிக்கையை 02

# வெளிநாடு அனுப்புவதாக யாழில் பண மோசடிகள்

காணி மோசடிகளும் அதிகரிப்பு
யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்



(யாழ்ப்பாணம்)

வெளிநாடு அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாணத்தில் பாரிய பண மோசடிகள் மற்றும் காணி மோசடிகள் அதிகரித்துள்ளன. இது தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் கேட்டுக் கொண்டுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## துவிச்சக்கரவண்டியிலிருந்து கீழே விழுந்தவர் மரணம்

பருத்தித்துறையில் சம்பவம்

(கரணவாய்)

பருத்தித்துறையில் துவிச்சக்கரவண்டியிலிருந்து கீழே விழுந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் பருத்தித்துறை வெளிச்சவீட்டு வீதியைச் சேர்ந்த திலிப் இராஜசிங்கம் (வயது - 52) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபருக்கு காய்ச்சல் ஏற்பட்ட 15

நாட்டின் எதிர்காலம்

## தொழில்நுட்பம், பசுமைத்துறை

ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

நாட்டின்எதிர்காலம்தொழில்நுட்பம் மற்றும் பசுமைத்துறை என்பவற்றிலேயே தங்கியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடை 16

## காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை மீண்டும் தாமதம்

அமைச்சர்கள் பங்கேற்கவுள்ளதால் ஒத்திவைக்கப்படவுள்ளதாக தகவல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்குமான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து முக்கிய அமைச்சர்கள் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளதால் கப்பல் பயணம் பிற்போடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக் 15

## கோழியிறைச்சி, நெத்தலி விலைகள் குறையவுள்ளன

(கொழும்பு)

கோழியிறைச்சி, நெத்தலியின் விலைகள் குறைவடையவுள்ளன.

எதிர்வரும் ஒரு வாரத்திற்குள் ஒரு கிலோ நெத்தலியின் விலை 200 முதல் 250 ரூபாய்க் 15


## ஆட்டோ உரிமையாளர்கள் யாழில் கவனயீர்ப்பு



15

## வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் காலத்தை இழுத்தடிக்கும் ரணில்

விக்னேஸ்வரன் விசனம்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உறுதியளிக்கப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லையென சுட்டிக் காட்டி தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 - 04 - 1954 | 09 - 10 - 2023 |

## மகேந்திரன் செல்வமணி(கிளி)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் செல்வமணி(கிளி) திங்கட்கிழமை(09,10.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னவன் மகேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரன் - காதிராசி தம்பதியினரின் இளைய அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னவன் - பூபதி தம்பதியினரின் பாசமிகு மருமகளும் ஜேந்திரனின்(ஜெனா-லண்டன்) பாசமிகு தாயாரும் சங்கீதாவின் (லண்டன்) அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், நல்லையா மற்றும் தவமணி, தவமலர், இலட்சுமணன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கண்மணி, பொன்னுத்துரை, கோபாலபிள்ளை மற்றும் அரியமலர், புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் காலஞ்சென்ற உருத்திரன் மற்றும் பிறேமா, ஸ்ரீஜெயா, புவீந்திரன், நரேந்திரன், லீகலா, ஸ்ரீபிரியா(கனடா), துஷ்யந்தி(கனடா) காலஞ்சென்ற சந்திரகலா மற்றும் கணேசலிங்கம், தவலிங்கம், சசிகலா, சூரியகலா, விஜயலட்சுமி, மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும் பிறேமலதா, பிறேமகுமார் (கொலண்ட்), பிறேமசுதா(லண்டன்), பிறேமரங்கா காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் தீபா, நுதாசினி(கனடா), உஷா, மகேந்திரன்(சீலன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இராசரத்தினம், தங்கமலர் ஆகியோரின் சம்மந்தியும் வர்ஷா(லண்டன்), கர்ஷா(லண்டன்), ஜரன் (லண்டன்), லக்ஷன், லக்ஷி, கவிஷாந்த் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் பவிஷ், பியாஷ் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.10.2023) வியாழக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்
075 182 5408

(17421)

## வெளிநாடு...

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் வன்முறை சம்பவங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், பெருமளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு , நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களை பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் பாரிய பண மோசடிகளே இடம்பெற்று வருகின்றன. கடந்த ஜனவரி மாதம் முதல் , கடந்த செப்டெம்பர் மாதம் வரையிலான கால பகுதியில் விசேட குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் பண மோசடிகள் தொடர்பில் 26 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 16 முறைப்பாடுகள் வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி பண மோசடி செய்தமை தொடர்பிலானது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்ததன் அடிப்படையில் இது வரையில் 13 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு , அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் விளம்பரங்களை நம்பி, அறிமுகம் இல்லாத நபர்களுக்கு அவர்களின் வங்கி கணக்கு இலக்கங்களுக்கு பணத்தினை வைப்பிலிடுகின்றனர். அவ்வாறு வைப்பில் இடும் போது , காரணத்தை தெளிவாக குறிப்பிட தவறுகின்றனர். அதனால் மோசடி காரர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

அதேபோன்று காணி மோசடிகளும் தற்போது அதிகளவில் இடம்பெறுகின்றன. வெளிநாட்டில் உள்ளவர்களை இலக்கு வைத்து, சமூக வலைத்தளங்கள் உள்ளிட்டவை ஊடாக விளம்பரங்களை செய்து காணி மோசடிக்ளில் ஈடுபடுகின்றனர்.

காணி பதிவாளர் திணைக்களத்தில் காணி தொடர்பிலான தகவல்களை பெற்றுக்கொள்ள கூடிய வசதிகள் இருந்தும், பலர் போலி உறுதிகளை நம்பி பெருமளவான பணத்தினை கொடுத்து காணிகளை கொள்வனவு செய்து ஏமாறுகின்றனர். காணி வாங்குபவர்கள் காணி தொடர்பிலான முழுமையான தகவல்களை பெற்று காணிகளை கொள்வனவு செய்தால் பணத்தினை இழக்க தேவையில்லை.

தற்போது விவசாய காணிகளை நொத்தாரிசுகள் மற்றும் அவர்களின் உதவியாளர்களை தரகர்கள் பயன்படுத்தி விவசாய காணிகளை மேட்டு நில காணிகள் என உறுதிகளில் மோசடி செய்தும், காணிகளின் அளவினை கூட்டி மோசடி செய்தும் வருகின்றனர். அவைகள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே காணிகளை கொள்வனவு செய்பவர்கள் காணி தொடர்பிலான ஆவணங்களை உரிய முறையில் பரிசீலித்து, அதன் உண்மைத்தன்மைகளை உறுதிப்படுத்தி காணிகளை கொள்வனவு செய்யுங்கள் என தெரிவித்தார். (ம-7.33)

## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து) - கிளிநொச்சி

### பதிவு இலக்கமும் பதிவுத் திகதியும் - PA/46 of 08.02.1971

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் .தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் 2023.10.15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்க தகைமையுள்ள சகல உறுப்பினர்களுக்குமான கூட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுடைய அழைப்பிதழ் கிடைக்கப் பெறாத உறுப்பினர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழு தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

<u>கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்</u>

கிளைபொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும், காலமும் **15.10.2023 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணி**

| தொ இல | கிளை இலக்கம் | கிளை | தவிசாளர் பெயர் | கிளைக்குழுதெரிவு நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 1 | கணேசபுரம் | திரு.சோமசேகரம் கிருஸ்ணகுமார் | பொதுநோக்கு மண்டபம், கணேசபுரம். |
| 2 | 2 | கனகபுரம் | திரு.பெருமாள் பவளராஜ் | கிளி.கனகபுரம் மகாவித்தியாலயம். |
| 3 | 3 | திருநகர் | திரு.மன்மதராசா லெட்டினன் | பொதுநோக்கு மண்டபம், திருநகர் வடக்கு. |
| 4 | 4 | ஜெயந்திநகர் | திரு.குணரத்தினம் ஹயந்தன் | பொதுநோக்கு மண்டபம், ஜெயந்திநகர். |
| 5 | 5 | கிளிநொச்சி மேற்கு | திரு.பாஸ்கரன்ரூபராஜ் | பொதுநோக்கு மண்டபம், பெரியபரந்தன். |
| 6 | 6 | உருத்திரபுரம் மேற்கு | திரு.பத்மநாதன் சஞ்ஜீவன் | பொதுநோக்கு மண்டபம், உருத்திரபுரம் மேற்கு. |
| 7 | 7 | உருத்திரபுரம் கிழக்கு | திரு.கணேஸ் சுரேஸ்பாபா | பொதுநோக்கு மண்டபம், உருத்திரபுரம் கிழக்கு. |
| 8 | 8 | சிவநகர் | திருமதி.டுஸ்மோகன் குகனிகா | கிளி.சிவநகர் அ.த.க பாடசாலை. |
| 9 | 9 | புதுமுறிப்பு | திரு.நாகமுத்து ஜெயவதனன் | பொதுநோக்கு மண்டபம், புதுமுறிப்பு. |
| 10 | 10 | கிளிநொச்சி கிழக்கு | திருமதி.பிரபாகரன் கவிதா லோறன்சியா | டொன் பொஸ்கோ பாடசாலை, கிளிநொச்சி கிழக்கு. |
| 11 | 11 | இரணைமடு கிழக்கு | திரு.அரசரத்தினம் பிரமிளன் | பொதுநோக்கு மண்டபம், மருதநகர் மேற்கு. |
| 12 | 12 | கனகாம்பிகைக்குளம் | திரு.இலட்சுமன்னன் சுதன் | கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை. |
| 13 | 13 | திருவையாறு | திரு.விமலேந்திரன் முகுந்தன் | பொதுநோக்கு மண்டபம், திருவையாறு மேற்கு. |
| 14 | 14 | இரத்தினபுரம் | திரு.நடராசா நாவேந்தன் | பொதுநோக்கு மண்டபம், இரத்தினபுரம். |
| 15 | 15 | ஆனந்தபுரம் | திரு.அந்தோனிப்பிள்ளை ஜேம்சன் | பொதுநோக்கு மண்டபம், ஆனந்தபுரம் கிழக்கு. |
| 16 | 16 | பாரதிபுரம் | திரு.கந்தசாமி சசிகரன் | கிளி.பாரதிபுரம் மகாவித்தியாலயம். |
| 17 | 17 | உதயநகர் | திரு.செல்வராசா ஜெயராசா | பொதுநோக்கு மண்டபம், உதயநகர் மேற்கு. |
| 18 | 18 | அம்பாள்குளம் | திரு.வல்லிபுரம் நிதர்சன் | பொதுநோக்கு மண்டபம், அம்பாள்குளம். |
| 19 | 19 | செல்வாநகர் | திரு.பற்றிக் துரைராஜா றோய் டனிஸ்ரன் | கிளி.செல்வாநகர் அ.த.க பாடசாலை. |

**குறிப்பு** - சங்கத்தின் 19 மூலக்கிளை பொதுச்சபை கூட்டத்திற்கும் உரிய அறிவித்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளபோதிலும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் கிளை இலக்கங்கள் 04, 05, 06, 09, 10, 11, 13,15 ஆகிய கிளைப்பொதுச்சபை கூட்டங்கள் நடாத்துவதற்கான இடங்கள் மேற்குறிப்பிட்டபடி மாற்றப்பட்டுள்ளன. குறித்த எட்டு கிளைகளுக்கான கிளைப்பொதுச்சபை கூட்ட இடமாற்றம் தொடர்பான கடிதங்கள் உரிய கிளை அங்கத்தவர்களிற்கு தனித்தனியே விநியோகிக்கப்பட்டுள்ளன.

செயலாளர்

திகதி- 11.10.2023 (C-7413) கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ.து)-கிளிநொச்சி.

## வைத்தியர்...

முன்வைத்தனர்.

துண்டிக்கப்பட்ட கை தொடர்பில் மருத்துவப் பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வைத்தியர் நிபுணர் குழு அறிக்கை மன்றுக்கு சமர்பிக்கப்படாத நிலையில்,

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய விடுதி வைத்தியர், பெண் தாதி உத்தியோகத்தர், ஆண் தாதி உத்தியோகத்தர் ஆகிய மூவரை உடனடியாக கைது செய்து வழக்கை முன்னோக்கி கொண்டு செல்ல மன்று அனுமதிக்க வேண்டும் என சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில் அடுத்த வழக்கு தவணையில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதாக தெரிவித்த நீதிபதி ஏ ஏ.ஆனந்தராஜா வழக்கை நவம்பர் மாதம் ஏழாம் திகதிக்கு தவணையிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, யாழ் போதனா வைத்திய சாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட சிறுமி வைசாலியின் கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்றுவரும் நிலையில் நீதிமன்றம் சிறுமி விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மூன்று வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்தது.

நேற்று வழக்கு விசாரணைக்கு வந்த போது துண்டிக்கப்பட்ட கை தொடர்பில் மருத்துவப் பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வைத்தியர் நிபுணர் குழு அறிக்கை மன்றுக்கு சமர்பிக்கப்படவில்லை. இந்நிலையிலே சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தனர். (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையான ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்குவோம்

## சர்வதேச நாணயநிதியம் உறுதி

**(மொராக்கோ)**


**கடனை நிலைநிறுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு சர்வதேச நாணயநிதியம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தலைமையிலான இலங்கைக் குழுவிற்கும் சர்வதேச நாணய நிதியம்-உலக வங்கிக் குழுக்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மொராக்கோவில் உள்ள மராகேச்சில் இடம்பெற்ற குறித்த சந்திப்பின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது பிரதி முகாமைத்துவப் பணிப்பாளரும் இலங்கையின் பல்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டியதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிரான மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான தற்போதைய பணிகள் குறித்தும் இரு தரப்பினரும்



இதன்போது கலந்துரையாடியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# குழந்தைகளின் உயிரிழப்பு வீதம் அதிகரிப்பு வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகள் உயிரிழக்கும் வீதம் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குழந்தைகள் பிறப்பின் போது, 1000 குழந்தைகளில் 12.3 வீதமான குழந்தைகள் உயிரிழப்பதாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால், சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டாகும் போது, இந்த இறப்பு சதவீதத்தை குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த சதவீதமானது, 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி 10.5 வீதமாகவும் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி 12.5 சதவீதமாகவும் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

# உயர்தரப் பரீட்சைக்கான நேரஅட்டவணை வெளியானது

(கொழும்பு)

இந்த வருடத்திற்கான ஒத்திவைக்கப்பட்ட உயர்தரப் பரீட்சைக்கான நேரஅட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 2024 ஜனவரி 31 ஆம் திகதி பரீட்சைகள் நிறைவடையும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி முதல் நாளில், கணிதம், உயிரியல், பொருளாதாரம் மற்றும் சமய பாடங்களுக்கான பரீட்சைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்களின் கட்டாய வருகை 80 சதவீதத் தில் இருந்து 40 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை கள் திணைக்களம் தெரிவித் துள்ளது. (நி-5-6)

# சாகும் வரைக்கும் அரசியலில் ஈடுபடுவேன்

## மகிந்த அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

தான் இறக்கும் வரை அரசியலில் ஈடுபடுவேன் என முன்னாள் ஜனாதிபதியும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இருப்பினும், கடந்த வாரம், மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வரும் எண்ணம் இல்லை என்றும், புதிய தலைவர் கள் உருவாக வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுடன் இணைந்து கட்சியின் முன்னோக்கி செல்லும் பாதையில் செல்ல பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக உறுதிப்படுத்தினார்.

நீண்டகாலமாக இலங்கை அரசியலில் முக்கிய பங்கை வகித்த முன்னாள் ஜனாதிபதி, அரசியல் களத்திற்கு பங்களிப் பதில் தனது அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தினார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன வேட்பா ளரை நிறுத்தும் நோக்கத்தை மகிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# தேர்தல் கண்காணிப்பு அமைப்பினரை சந்தித்த மஹிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் கஃபே அமைப்பின் பிரதிநிதிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள கஃபே அமைப்பின் தலைமை காரியாலயத்தில் இடம் பெற்றது.

இந்த சந்திப்பின் போது தொடர்ச்சியாக தேர்தல்கள் பிற்போடப்படுவதன் பாதகங்கள். அரசியலில் பெண்களின் வகிபாங்கள். பெண் அரசியல் வாதிகள் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு அரசியலில் பெண்கள் நிலைத்திருக்க செய்வதன் அவசியம் போன்றவை. தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (நி-5-6)

# புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவி விபத்தில் சிக்கி உயிரிழப்பு

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவியொருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் தலாவ மத்தி பகுதியில் சுற்றுவட்டம் ஒன்றுக்கு அருகாமையில் எரிபொருள் தாங்கியொன்று மோட்டார் சைக்கிளில் மோதுண்ட காரணத்தினால் 10 வயதுடைய இந்த சிறுமி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணி அளவில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் - பாதெனிய பிரதான வீதியில் தலாவ நகர மத்தியில் அமைந்துள்ள சுற்று வட்டத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தலாவ ஆரம்ப பாடசாலையில் தரம் ஐந்தில் கற்கும் 10 வயதான டபிள்யூ. நிசல்யா நெத்சரணி விமலசேன என்ற சிறுமியே இவ்வாறு துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார். இந்த சிறுமி இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ளார் என்பது குறிப்பிட த்தக்கது.

# பல்கலைக்கழக விடுதிகள் இரவில் சோதனைக்கு உட்படுத்தப்படும்

## உயர்கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பல்கலைக்கழக விடுதிகளை இரவு வேளைகளில் சோதனைக்கு உட்படுத்த தீர்மானித்துள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விடுதிகளில் இடம்பெறும் பகிடிவதைகளைத் தடுக்கும் விதமாகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதிகளில் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரையான காலப்பகுதியில் அதிகளவிலான பகிடிவதைகள் இடம்பெறுவதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்நிலையில் பல்கலைக் கழகங்களில் பகிடிவதையைத் தடுப்பதற்கான தேசிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்நடவடிக்கையில் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரிகளும் மாணவ ஆலோசகர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதுமட்டுமல்லாது பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக வட்ஸப் இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விரைவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரோஹித் சர்மா அதிரடி சதம்

# ஆப்கானிஸ்தானை இலகுவாக வீழ்த்தியது இந்திய அணி



உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் நேற்றைய போட்டியில், இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் போட்டியிட்ட நிலையில், இந்திய அணி 90 பந்துகள் மீதமிருக்க 8 விக்கட்டுக்களால் இலகு வெற்றியை பெற்றுள்ளது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதன்படி, ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஹஷ்மதுல்லா ஷஹிடி 80 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்தார்.

பதிலளித்தாடிய இந்திய அணி 35 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ரோஹித் சர்மா 84 பந்துகளில் அதிகூடிய ஓட்டங்களாக 131 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்தார்.

இதன்படி, உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் ஆகக் குறைந்த பந்துகளில் சதம் கடந்த முதலாவது இந்திய வீரர் என்ற பெருமையை இந்திய அணியின் வீரர் ரோஹித் சர்மா தனதாக்கிக் கொண்டார்.

இதற்கு முன்னதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் கபில்தேவ் 71 பந்துகளில் சதத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய சதத்துடன் அவர் மொத்தமாக 7 சதங்களை கடந்துள்ளார். இரண்டாவது இடத்தில் இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## விராட் கோலியினை கட்டியணைத்த நவீன்

### கிரிக்கெட்டில் நெகிழ்ச்சி சம்பவம்



இந்திய அணி 2-வது போட்டியில் ஆப்கானிஸ்தானுடன் நேற்று மோதியது. இந்த போட்டியில் அனைத்து ரசிகர்களும் விராட் கோலி - நவீன் உல் ஹக் மோதல் குறித்து ஆவலுடன் எதிர் பார்த்து கொண்டிருந்தனர்.

டுவிட்டரில் கூட mango என்ற வார்த்தை டிரெண்ட் ஆனது. நவீன் பட்டிங் செய்த போது ரசிகர்கள் விராட் கோலி என ஆர்ப்பரித்தனர். அதே போல விராட் கோலி பட்டிங் செய்த போது நவீன் பந்து வீசினார்.

அப்போது ரசிகர்கள் மீண்டும் விராட் கோலி என கோஷமிட்டனர். அப்போது விராட் கோலி வேண்டாம் என கை சைகை மூலம் காட்டினார்.

இதனையடுத்து நவீன் உல் ஹக் ஓடி வந்து விராட் கோலியை கட்டியணைத்து இருவரும் கைகுலுக்கி சிரித்தனர். இந்த செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. (ம-7)




## ஒரே போட்டியில்

## பல சாதனைகள் படைத்த ரோஹித் சர்மா

இந்தியா, ஆப்கானிஸ்தான் இடையிலான போட்டி நேற்று நடைபெற்றது.

இந்தியா சார்பில் தொடக்க வீரராக களமிறங்கிய கேப்டன் ரோஹித் சர்மா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர், 84 பந்துகளில் 131 ரன்களை குவித்து அசத்தினார். இதில் 16 பவுண்டரிகளும், 5 சிக்சர்களும் அடங்கும். இந்த போட்டியில் சதம் அடித்த ரோஹித் சர்மா பல்வேறு சாதனைகளை படைத்துள்ளார்.



அதன்படி, உலகக் கோப்பை தொடர்களில் அதிக முறை சதங்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் ரோஹித் சர்மா முதலிடம் பிடித்துள்ளார்.

அதிக சதங்கள் அடித்திருந்த வீரர்களில் ரோஹித் சர்மா, சச்சின் டெண்டுல்கர் சாதனையை முறியடித்துள்ளார்.

இத்துடன் உலகக் கோப்பை தொடரில் ஆயிரம் ரன்களை கடந்த நான்காவது இந்திய வீரர் என்ற பெருமையை ரோஹித் சர்மா பெற்றுள்ளார். முன்னதாக சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி மற்றும் சவுரவ் கங்குலி ஆகியோர் இந்த சாதனையை படைத்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதை தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட்டில் அதிக சிக்சர்களை விளாசிய வீரர் என்ற சாதனையை ரோஹித் சர்மா படைத்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டி தபால் முத்திரை மற்றும் நூறாவது ஆண்டு நூல் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. (படங்கள்:-சிவசாந்தன்)

# உலகளவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி இலங்கையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்

## வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை


(கொழும்பு)

தற்போதைய உலகளாவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக இலங்கையில் எரிபொருளின் விலை உயரும் அதேவேளை பொருட்களின் விலையும் பாரிய பாய்ச்சலில் உயரும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலையை அதிகரிக்காமல் இருப்பதே இதற்கு ஒரே பதில். அத்துடன் மீண்டும் எரிபொருள் கோட்டா முறைக்கு செல்ல வேண்டும்.

உலகில் நிலவும் யுத்த சூழல், எதிர்வரும் குளிர் காலநிலை, எரிபொருள் போக்குவரத்திற்காக அறவிடப்படும் காப்புறுதி கட்டண அதிகரிப்பு, எரிபொருள் விநியோகம் குறைவடைந்தமை போன்ற காரணங்களால்



எரிபொருள் விலை மேலும் உயரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5-6)

# ஜனாதிபதி ரணில் சீனாவிற்கு விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயமாக நாளை மறுதினம் சனிக்கிழமை சீனா செல்லவுள்ளார்.

இதன்போது சீன அரசாங்கத்துடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேலும் இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்றும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



# முல்லை பேருந்து நிலையம் விரைவில் மக்கள் பாவனைக்கு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்திற்கு இரண்டாம் கட்ட நிதியாக 90 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 24 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக மத்திய பேருந்து நிலையம் இயங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், பிரதேச செயலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையினர், உள்ளூராட்சி அதிகார சபை, கரைதுறைப்பற்று பிரதேச சபை, தனியார் போக்குவரத்து மற்றும் அரச போக்குவரத்து சபையினர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்திற்கு நேற்று முன்தினம் களவிஜயம் மேற்கொண்ட வேளை இம்மாதம் 24 ஆம் திகதி மக்கள் பாவனைக்கு விடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-299)

# இராசிபலன்

12.10.2023
புரட்டாதி 25, வியாழக்கிழமை
திரயோதசி முன்னிரவு 8.47 மணிவரை
பூரம் பிற்பகல் 1.22 மணிவரை

சுபநேரம் -7.32-9.02 மணிவரை
இராகுகாலம்-1.32-3.02 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்-
அவிட்டம், சதயம்.

**வளவன்**




வழிபாடு ஆனந்தம் தரும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், செல்வ நிலை உயரும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை, வருமானம் திருப்தி தரும்.




ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திடீர் பணவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.




உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.




பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.




அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள்.




புதிய தொழில்வாய்ப்புக்கள் தேடி வரலாம், விட்டுச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேரலாம், குடும்பத்தினர் நலன் கருதி புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.




பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.




வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள் தொழில் ரீதியாக முக்கிய நபர்களைச் சந்திப்பீர்கள்.





நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

உழைப்பு உடலை பலப்படுத்தும், கஷ்டங்கள் மனதைப் பலப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நாகபட்டினம்-காங்கேசன்துறை பயணிகளுக்கான கப்பலை நேற்று தமிழ்நாடு கடல்சார் வாரிய நாகப்பட்டின துறைமுகத்தில் மறவன்புலவு சச்சிதானந்தன் பார்வையிட்ட போது...

## அதிக விலைக்கு விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கு அபராதம்

(கரணவாய்)

சம்பா அரிசி மற்றும் முட்டையை கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்த இரண்டு வர்த்தகர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நெல்லியடி பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன்போது சம்பா அரிசி, முட்டை ஆகிய இரண்டையும் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலை க்கு விற்பனை செய்த இரண்டு வர்த்தகர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (நி-5-6-60)

## காலபோக உரமானிய பதிவு

(கரணவாய்)

கப்புது, துன்னாலை தெற்கு பிரிவிலுள்ள வயற் காணிகளுக்கான உர மானிய பதிவானது இன்று மற்றும் நாளை கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெறும். எனவே கப்புது, துன்னாலை தெற்கு பிரிவிலுள்ள வயற் காணிகளில் நெற்செய்கை செய்பவர்கள் தவறாது குறித்த திகதிகளில் தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கரவெட்டி கமநல சேவை கள் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஸ்ரீ.கோபிநாத் அறிவித்துள்ளார். (நி-5-6-60)

## மயானத்தை அபிவிருத்தி செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுப்பு

(கரணவாய்)

கரணவாய் தெற்கில் அமைந்துள்ள இந்து மயானம் எந்தவித அபிவிருத்தியும் செய்யப்படாமல் காணப்படுகிறது.இந்த மயானத்துக்கென அமைக்கப்பட்ட நிர்வாகம் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது.குறித்த மயானம் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குரிய 3 கிராமங்களை உள்ளடக்கியது.

சரியான வகையில் பராமரிப்பு இல்லாமையால் மயானத்துக்கு செல்லும் பொது மக்கள் அங்கு சற்று நேரம் கூட நிற்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அவற்றை அபிவிருத்தி செய்து தருமாறும் 3 கிராமங்களையும் சேர்ந்த பொது மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-5-6)

## சட்டவிரோதமாக படகு மூலம் இலங்கை திரும்பிய மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

தமிழக கடற்றொழிலாளர்களின் படகின் மூலமாக, சட்டவிரோதமாக இலங்கை திரும்பிய மூவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் தொடர்ந்து வாழ முடியாத நிலையில் மூவரும் தமிழக கடற்றொழிலாளர்களின் உதவியுடன் படகு மூலம், யாழ் வடமராட்சி குடத்தனை பகுதியில் வந்திறங்கி உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்த நிலையில் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5-6-33-60-104)

# கைக்குண்டுடன் நபரொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி துன்னாலை பகுதியில், நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழில் பல்வேறு பகுதிகளிலும், இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் குறித்த நபருக்கு தொடர்பு இருப்பதாகவும், வவுனியாவை சேர்ந்த குறித்த நபர் நீண்ட காலமாக துன்னாலை பகுதியில் வசித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33-60)

## மரதன் ஓட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண்,பெண் இருபாலாருக்குமான மாபெரும் மரதன் ஓட்ட நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் உரிய ஆவணங்களுடன் மாவட்ட செயலகத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5-6-285)

## தென்மராட்சி பகுதியில் கசிப்புடன் நால்வர் கைது



(சாவகச்சேரி)

மதுவரித் திணைக்களங்களின் கூட்டு சுற்றிவளைப்பில் நேற்று புதன்கிழமை காலை தென்மராட்சி கெற்பேலி பகுதியில் நால்வர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக மதுவரித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம்,மல்லாகம் மற்றும் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் இணைந்து தென்மராட்சிப் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கெற்பேலிப் பகுதியில் வெவ்வேறு இடங்களில் மூவரும்-மட்டுவிலில் ஒருவரும் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நால்வரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதில் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி-5-6-30)

## 10 லட்சம் ரூபாய் பெறுமதியான உடைமைகளை அபகரித்த கும்பல் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை கட்டி வைத்து விட்டு பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான உடைமைகளை அபகரித்துச் சென்ற கும்பல் ஒன்றினை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த மாத இறுதிப் பகுதியில் தனங்கிளப்பு பகுதியில் இளைஞன் ஒருவரை கட்டி வைத்து விட்டு, உடைமையிலிருந்த 5 பவுண் நகை, பெறுமதியான இரண்டு தொலைபேசிகள், மணிக்கூடு, பணம் என 10இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களை அபகரித்துக் கொண்டு தப்பித்துள்ள கும்பல் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு இளைஞன் வழங்கிய முறைப்பாட்டினை அடிப்படையாக கொண்டு தொலைபேசி தரவுகள் மூலம் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பெண்கள் அடங்கலாக ஐவரை கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் ஐவர் மற்றும் சந்தேகநபரில் ஒருவர் இளைஞனுடைய நகைகளை உருக்கி நகைக் கடையில் விற்றுள்ள நிலையில் நகைக்கடை உரிமையாளர் ஆகியோர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி கைது நடவடிக்கையை வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்,வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் வழிநடத்தலில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் ஆலோசனையில் பொலிஸ் உபபரிசோதகர் டார்வின் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆயிரம் சிறுவர்கள்

# போஷாக்கின்மையால் பாதிப்பு

## யுனிசெஃப் அறிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் 50,000 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெஃப் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.**



இதன் காரணமாக 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அவசியம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே, குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ர மாலி டி சில்வா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் மாவட்டம் விவசாயத்தினை பிரதான வாழ்வாதாரமாக கொண்டுள்ள நிலையில், முறையான அறுவடை இன்மையினால் சிறுவர்கள் போஷாக்கு குறைபாட்டுக்கு உள்ளாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக தாய்ப்பாலைக் கூட உரிய முறையில் வழங்கி மந்த போஷன நிலைமையினை குறைக்க முடியாதுள்ளதாக பிரதேச மக்கள் தெரி விக்கின்றனர். (நி-5-6)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் தாக்கம் செலுத்திய சினோபெக்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விற்பனை வீழ்ச்சி நேரடியாக அதன் வருமானத்தை பாதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் சினோபெக் ஒக்டேன் 92 ரக பெற்றோலை குறைந்த விலையில் விற்பனை செய்வதால் இவ்வாறு எரிபொருள் தேவை குறைந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சினோபெக் நிறுவனம் ஒக்டேன் ஒரு லீற்றர் 92 ரக பெற்றோலினை 358 ரூபாவிற்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஐஓசி நிறுவனம் ஆகியவை ஒக்டேன் 92 ரக ஒரு லீற்றர் பெற்றோலினை 365 ரூபா விற்கும் விற்பனை செய்கிறது.

இந்நிலைமை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இதுவரையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏறக்குறைய 100 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் சுமார் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அவர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

எவ்வாறாயினும், தமது எரிபொருள் நிரப்பு நிலையங்களை சீன நிறுவனத்திற்கு வழங்குவது தொடர்பில் எரிபொருள் பிரிவினையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், சினோபெக் குறைந்த விலைய்யில் எரிபொருளை விற்கும்போது, பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஐஓசி நிறுவனங்கள் அதிக விலைக்கு எரிபொருளை விற்பது நியாயமற்றது என பெற்றோலிய பிரிவின்னயாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி -5-6)

# வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கைக்கு பச்சைக்கொடி காட்டிய சீனா

(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கு சீன எக்ஸிம் வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

இலங்கையின் பிரதான இருதரப்புக் கடனாளியான சீனா, எமது நாட்டின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான ஆரம்ப இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.சீன எக்சிம் வங்கி ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் இதனை அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் போது எமது நாடு 46 பில்லியன் டொலர்களை கடனாக வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டியிருந்ததாகவும், பல தரப்புக் கடன்களை எமது நாடு தொடர்ச்சியாக செலுத்தி வரு கின்ற போதிலும், இருதரப்பு கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அங்கு முக்கியமாக கடன் கொடுத்த தரப்பு சீனா.

இதன் படி, சீன எக்ஸிம் வங்கியினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானமானது எமது நாட்டின் பொருளாதாரத்திற்கும் அது தொடர்பான சகல விடயங்களுக்கும் மிக வும் முக்கியமானது எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 120 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 400 | 400 |
| தக்காளி | 160 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 140 | 150 | 160 |
| கோவா | 200 | 150 | 150 | 200 |
| கரட் | 200 | 300 | 300 | 300 |
| பூசணி | 60 | 80 | 60 | 100 |
| புடோல் | 80 | 80 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 220 | 300 |
| பாகற்காய் | 350 | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 120 | 140 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 200 | 250 | 120 | 200 |
| லீக்ஸ் | 150 | 150 | 140 | 140 |
| பீற்றூட் | 120 | 120 | 140 | 160 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 180 | 100 | 100 |
| போஞ்சி | 80 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-100 |
| இராசவள்ளி | 350 | 400 | 500 | 550 |
| வெங்காயப்பூ | 280 | 300 | 400 | 480 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 100 | 100 | 150 |


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber/ Whatsapp: 076 636 3378

E.mail:

Valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 லட்சத்து 63 ஆயிரம் மக்கள் காசாவை விட்டு வெளியேற்றம்

## ஐ.நா தகவல்



(ஜெனிவா)

காசாவை விட்டு 263, 000 இற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா மனிதாபிமான விவகாரங்களுக்கான அலுவலகம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது பாலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகள் பயங்கரமான தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

இத்தாக்குதல்களினால் 1000 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் உயிரிழுந்தனர். இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் போர் பிரகடனம் செய்தது.

இதனையடுத்து காஸா பகுதியைக் குறிவைத்து இஸ்ரேல் தீவிரமாக வான் வழித் தாக்குதல் நடத்தி வருவதோடு இத்தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காஸாவை விட்டு 263,000 இற்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐ.நா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. அத்துடன் இவ் எண்ணிக்கையானது மேலும் உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# நிமிடத்திற்...

# ஹமாஸ்...

(காசா)

**இஸ்ரேல் மீது ஹம... பித்துள்ளது.இரு தரப்... மூவாயிரத்தை கடந்த... உயிரிழப்பு அதிகரித்த...**

காசா பகுதியில் இருந்து ஹமாஸ் அமைப்பினர் ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 30 விநாடிகளுக்குள் 2 சுற்றுகள் ரொக்கெட்களை வீசி அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதேவேளை இஸ்ரேலிய இராணுவம் காசா பகுதியில் தனது தாக்குதலை தொடர்கிறது. இதனால் இருதரப்பிலுமே உயிரிழப்பு நிமிட...

த்த... கெ... தெ... பிர... உ... கா... 90... யி... எ... ஹ... இ...

# இஸ்ரேலில் சிக்கியுள்ள கனேடியர்களை மீள அழைத்து வர நடவடிக்கை

## கனேடிய வெளிவிவகார அமைச்சர்

(ஒட்டாவா)

இஸ்ரேலில் தங்கியுள்ள கனேடியர்கள் நாட்டுக்கு மீள அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் விமானம் மூலம் கனேடியர்கள் அழைத்து வரப்பட உள்ளதாகவும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலெனி ஜோலி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்து வரும் பின்னணியில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் தெல் அவீவிலிருந்து கனேடியர்கள் அழைத்து வரப்பட உள்ளதாகவும் கனேடிய இராணுவத்திற்குச் சொந்தமான விமானங்களின் மூலம் இந்த மீட்பு நடவடிக்கையை முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் விமான நிலையத்திற்கு செல்ல முடியாத கனேடியர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு வேறு வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இ தே வே ளை , இஸ்ரேலில் தங்கியுள்ள கனேடியர்கள் +1-613-996-8885 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கோரியுள்ளார்.

மேலும் கனேடியர்கள், இஸ்ரேலில் தங்களது நடமாட்டத்தை வரையறுத்துக் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

எனினும் காஸா பிராந்தியத்தில் தங்கியுள்ள கனேடியர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களையும் வெளிவகார அமைச்சர் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இஸ்ரேலுக்கு உறுதுணையாக... நெதன்யாகுவிடம் தெரிவி...

(டில்லி)

பாலஸ்தீன எல்லையில் தொடரும் போர் பிரச்சினை குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்பே... வித்த மோ... மான நேர... மக்கள், இ... தியாக நிற்... றும் தீவிரவ... த்து வடிவா... தியா கண்... றும் தெரி... (நி-5-6)

# கண்மூடித்தனமாக தாக்கும் இஸ்ரேல் வேடிக்கை பார்க்கும் உலகம்

## துருக்கி ஜனாதிபதி சாடல்



(அங்காரா)

இஸ்ரேலுக்கும்- பாலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையே தீவிரமாகப் போர் இடம்பெற்று வரும் நிலையில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு தனது போர்க்கப்பலை அனுப்பிய விடயம் குறித்து துருக்கி ஜனாதிபதி எர்டோகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது "இஸ்ரேலுக்கு அமெரிக்கா தனது விமானம் தாங்கிப் போர்க்கப்பலை அனுப்பியுள்ளது. அமெரிக்காவுக்கு இஸ்ரேலில் என்ன வேலை? காசாவிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குண்டுமழை வீசுவதற்கே அமெரிக்கா இந்த வேலையில் இறங்கியுள்ளது.

காஸாவுக்குள் தண்ணீர் செல்லும் பாதைகள் நிறுத்தப்பட்டுள்ளதோடு மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது. அங்கிருக்கும் மருத்துவமனைகள் செயற்படும் நிலையில் இருக்கின்றனவா எனத் தெரியவில்லை.

வழிபாட்டுத்தலங்கள், மருத்துவமனைகள், பாடசாலை என கருணையின்றி குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகின்றது. உலகம் இதனை அமைதியாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. யாரும் எதுவும் சொல்வதில்லை. மனித உரிமைகளுக்கு என்ன ஆனது?" இவ்வாறு எர்டோகன் கேள்வி எழுப்பியுள்ளார். (நி-5-6)

# ஹமாஸ் தாக்குதலில் மேலும் இரு பிரான்ஸ் பிரஜைகள் பலி



(பாரிஸ்)

இஸ்ரேலில் ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலில் மேலும் இரு பிரான்ஸ் பிரஜைகள் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் மீது ஹமாசின் தாக்குதலில் நான்கு பிரான்ஸ் பிரஜைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 13 பிரான்ஸ் பிரஜைகள் குறித்த விபரங்கள் தெரியவில்லை என பிரான்ஸ் அதிகாரிகள், தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இஸ்ரேல் முன்னெச்சரிக்கையின்றி விமானதாக்குதல்களை மேற்கொண்டால் பொது மக்களை கடத்துவோம் என்ற ஹமாசின் எச்சரிக்கைக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...த்திற்கு நிமிடம் அதிகரிக்கும் உயிரிழப்பு

# ...மாஸ் மீண்டும் உக்கிர தாக்குதல்

**...மீது ஹமாஸ் மீண்டும் தாக்குதலை ஆரப் ... இரு தரப்பிலும் உயிரிழப்பின் எண்ணிக்கை ...த கடந்த நிலையில் நிமிடத்திற்கு நிமிடப் ...திகரித்த வண்ணம் உள்ளது.**





...மாஸ் ...ள வீசி ... அங் ... தெரி ...துள் 2 ... வீசி ...புள்ள ...ரலிய ...தனது ...னால் ...நிமிட...த்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என தெரிவிக்கப்படுகின்றது.

5 ஆவது நாள் தாக்குதலுக்கு பிறகு இஸ்ரேலில் 1,008 பேர் உயிரிழந்துள்ளதுடன் 3,418 பேர் காயமடைந்துள்ளனர். காசாவில் 900 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 4,250 பேர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் மண்ணில் 1500 ஹமாஸ் அமைப்பினரை இஸ்ரேல் இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது. மேற்கு கரை பகுதியில் 21 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 130 பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலுக்கு அருகில் இரண்டாவது கடற்படை விமானம் தாங்கி கப்பலை அனுப்புவது தொடர்பில் அமெரிக்கா பரிசீலித்து வருவதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி வால் ஸ்ட்ரீட் ஜேர்னல் நேற்று முன்தினம் மாலை செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கும் என்றும், அதன் பாதுகாப்பு உதவி ஞாயிற்றுக்கிழமை முதல் நகரத் தொடங்கும் என்றும் அமெரிக்க பாது காப்புத் துறை அதிகாரி ஒஸ்ரின் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் படையினரின் தாக்குதலுக்கு முன்பு கொடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை இஸ்ரேல் அரசு நிராகரித்து விட்டதாக எகிப்து உளவுத் துறை அதிர்ச்சி தகவல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆங்கில ஊடகத்தில் பேசிய எகிப்து உளவுத் துறை அதிகாரி, இஸ்ரேல் மீது மிகப் பெரிய தாக்குதல் நடத்த காஸா பகுதிக்குட்பட்ட பகுதியில் திட்டம் தீட்டப்படுவதாக பலமுறை இஸ்ரேலுக்கு எச்சரிக்கப்பட்டது எனினும் அது குறித்து விரிவாக பரிசீலிக்காமல் ஜெருசலேம் அதனை நிராகரித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


## ...துணையாக நிற்போம் ...தெரிவித்த மோடி



இதன்போது கருத்து தெரிவித்த மோடி இந்த கடினமான நேரத்தில் இந்திய மக்கள், இஸ்ரேலுடன் உறுதியாக நிற்கின்றனர் என்றும் தீவிரவாதத்தை அனைத்து வடிவங்களிலும் இந்தியா கண்டிக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். (ரி-5-6)

## ஹமாஸ் படைகளை ஆதரித்தால் கண்டிப்பாக பதில் கூற வேண்டும்

### பிரித்தானிய மக்களுக்கு சுனக் எச்சரிக்கை



(லண்டன்)

பிரித்தானியாவில் ஹமாஸ் படைகளை ஆதரிப்பவர்கள் கண்டிப்பாக பதில் கூற வேண்டியிருக்கும் என பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரித்தானிய அரசும் மக்களும் இஸ்ரேல் முன்னெடுக்கும் போரை ஆதரிப்பதாக கூறியுள்ளதுடன் இஸ்ரேல் நாட்டில் பிரித்தானிய குடிமக்கள் எவரேனும் சிக்கியிருந்தால், அவர்களுக்கு உதவ அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு லண்டனில் உள்ள ஒரு ஜெப ஆலயத்திற்கு கடந்த திங்கட்கிழமை இரவு விஜயம் செய்த நிலையில், இஸ்ரேலுக்கான தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள பிரதமர் சுனக், பிரித்தானிய அரசும் மக்களும் இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். பிரித்தானிய - இஸ்ரேல் இரட்டை குடியுரிமை கொண்ட பலர் தற்போது இஸ்ரேல் - காஸா நெருக்கடியில் சிக்கியிருப்பதாக வெளியான தகவலை அடுத்தே, உதவ தயார் என அறிவித்த அவர் மேலும், பிரித்தானியாவில் உள்ள இஸ்ரேலிய மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஹமாஸ் படைகள் தீவிரவாதிகள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ள சுனக், பிரித்தானிய மக்கள் ஹமாஸ் படைகளுக்கு ஆதரவளிப்பதை தவிர்க்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (ரி-5-6)

## ...மலும் ...ர் பலி



...அதிகாரிகள், ...ர். ...ர் இஸ்ரேல் ...கையின்றி ...தல்களை ...ல் பொது ...த்துவோம் ...ன் எச்சரிக் ... ஜனாதிபதி ... மக்ரோன் ...த்தை தெரி... (ரி-5-6)

## மியான்மாரில் குண்டுத்தாக்குதல் 11 குழந்தைகள் உட்பட 30 பேர் பலி

### 56 பேர் காயம்



(நைப்பியிதோ)

மியான்மாரில் இராணுவ அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள புலம் பெயர்ந்தவர்களுக்கான முகாம் பகுதியில் வெடி குண்டுத் தாக்குதல் நடைபெற்றதில் 30 பேர் உயிரிழந்துள்ளதுடன் 56 பேர் காய மடைந்துள்ளனர்.

வடகிழக்கு மியான்மாரில் இராணுவ அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள லைசா நகருக்கு வெளியே புலம் பெயர்ந்தவர்களுக்கான மோங்லாய் கெட் முகாம் பகுதியில் வெடி குண்டு தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன.

இத்தாக்குதலில் 11 குழந்தைகள் உட்பட சுமார் 30 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் மேலும் 56 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 44 பேர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன் உயிரிழந்தவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கசின் பகுதியை சேர்ந்த பொதுமக்கள், சுதந்திர குழுவிற்கு அளித்து வரும் ஆதரவை விரும்பாத மியான்மர் இராணுவம் இத்தகைய தாக்குதல்களில் ஈடுபடுவதாக இக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ரி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகேது பெயர்ச்சிப் பலன்கள்

## 08.10.2023-25.04.2025

## நினைத்த தொழிலை தொடங்கும் வாய்ப்பு உருவாகும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



### துலாம் இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரம் உங்கள் இராசிக்கு விரய ஸ்தான மான 12 ஆம் இடத்திற்கு கேது வருகிறார். 6 இல் ராகு இருந்து, குரு கேந்திரத்தில் இருப்பதால் "அஷ்டலட்சுமி யோகம்" உருவாகின்றது.

ஆறாம் இடத்திற்கு வரும் ராகுவால், தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு இயங்குவீர்கள். கடன்சுமை குறையும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நினைத்த தொழிலை தொடங்கும் வாய்ப்பு உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவை வந்து சேரும். வாகனம் வாங்கும் யோகமும் உண்டு. கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். பிறருக்காக எடுத்த முயற்சியில் உங்களுக்கும் ஆதாயம் கிடைக்கும். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். வீண் விரயம் ஏற்படாமல் தடுக்க சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள்.

#### குரு மற்றும் சனி வக்கிர காலம்

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகைக் கிரகம் என்பதால் இந்த வக்கிர காலத்தில் திருமணத் தடை அகலும். கட்டடம் கட்டும் பணியில் இருந்த தொய்வு நீங்கும். பொதுவாழ்வில் இருப்பவர்கள் இழந்த பதவியை மீண்டும் பெறுவர். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளுக்கு நெருக்கமாகி, தேவையான சலுகைகளைப் பெறுவீர்கள்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும் 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப ராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். இந்த சனியின் வக்கிர காலத்தில் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். கொடுக்கல் - வாங்கலில் குறுக்கீடுகள் ஏற்படலாம். எதையும் துணிந்து செய்ய இயலாது.

#### சனிப்பெயர்ச்சி காலம்

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனிபகவான் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்திற்கு சனி பகவான் செல்வதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப் பெறுகின்றது. எனவே செய்தொழில் எதுவாக இருந்தாலும் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் இருந்த




குழப்பங்கள் அகலும். தடைப்பட்டு வந்த காரியங்கள் சிறப்பாக நடைபெறும். எண்ணங்கள் எளிதில் நிறைவேற பிறர் ஒத்துழைப்பு நல்குவர். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

#### குருப்பெயர்ச்சி காலம்

1.5.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு செல்கிறார். அவர் அங்கிருந்து உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். எனவே தனவரவு திருப்தி தரும். தடைகள் அகலும். விரய ஸ்தானத்தை குரு பார்ப்பதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களை விற்று, புதிய சொத்து வாங்க முன்வருவீர்கள். ஆன்மிகப் பயணம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவு கிடைக்கும்.

#### பெண்களுக்கான பலன்கள்

இந்த ராகு-கேது பெயர்ச்சி உங்களுக்கு நன்மை தரும் பெயர்ச்சியாகவே அமைகிறது. உடல்நலம் சீராகி, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். குடும்ப விடயங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படும். பணிபுரியவர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

#### வளர்ச்சி தரும் வழிபாடு

ஆறாம் இடத்து ராகுவால் யோகங்கள் அனைத்தும் வந்து சேரவும் பன்னிரெண்டாம் இடத்து கேதுவால் பயணங்களில் அதிக நற்பலன் கிடைக்கவும் இல்லத்தில் ஆஞ்சநேயர் படம் வைத்து அனுமன் கவசம் பாடி வழிபாடு செய்யுங்கள்.

## வெளிநாட்டிலிருந்து ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும்!



### விருச்சிக இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதேநேரம் கேது பகவான் லாப ஸ்தானத்திற்கு வருவதால் தொழில் வளம் சிறப்பாகும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும்.

பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் ராகுவால் புதிய பாதை புலப்படும். பூர்வீகச் சொத்துக்களால் லாபம் உண்டு. தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து உற்சாகம் அடைவீர்கள். பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும். பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டாகும். வேலைவாய்ப்பின்றி இருந்தவர்களுக்கு வேலையும் மணமாலை அமையாதவர்களுக்கு திருமணமும் கைகூடும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

லாப ஸ்தான கேதுவின் சஞ்சாரத்தால் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக லாபம் பெறுவீர்கள். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். வீடு கட்டுவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். வெளிநாட்டில் இருந்து ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை, முறைப்படி அனுகூலம் தரும் தலங்களில் செய்தால் மேலும் நன்மை கிடைக்கும்.

#### குரு மற்றும் சனி வக்கிர காலம்

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசியிலும் குரு சஞ்சரிக்கிறார். இந்த வக்கிர காலத்தில் கூடுதல் கவனத்தோடு இருப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு குறையும். கூட்டாளிகளின் மீது நம்பிக்கை ஏற்படாது. அனுபவஸ்தர்களின் ஆலோசனை அவ்வப்போது கைகொடுக்கும்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும் 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். இந்த சனியின் வக்கிர காலத்தில் உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்லுங்கள். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. பண விரயங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

#### சனிப்பெயர்ச்சி காலம்

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் செல்கிறார். இக்காலத்தில் உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் ஏற்படுகிறது. எனவே எதையும் கொஞ்சம் யோசித்துச் செய்வது




நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். உத்தியோகத்தில் இடமாற்றம் கிடைக்கலாம். சனி உங்களுக்கு சகாய ஸ்தானாதிபதி என்பதால், வரும் மாற்றங்கள் நல்ல மாற்றமாகவே இருக்கும். நிலம் வாங்குவது, திருப்பணியில் ஆர்வம் உண்டாகும்.

#### குருப்பெயர்ச்சி காலம்

1.5.2024 அன்று ரிஷப இராசிக்கு செல்லும் குரு, 7 ஆம் இடத்தில் இருந்து உங்கள் இராசியையும் 3, 11 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகிறார். வருங்காலம் சிறப்பாக அமையும். எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாழ்வில் வசந்தம் வரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். திருமண முயற்சி பலன் தரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். தொழில் வெற்றிநடைபோடும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். புதிய ஒப்பந்தங்களால் பொருளாதார நிலை உயரும்.

#### பெண்களுக்கான பலன்கள்

இந்த ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் பணி உயர்வு கிடைக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும்.

#### வளர்ச்சி தரும் வழிபாடு

பஞ்சம ஸ்தான ராகுவால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நடைபெறவும் லாப ஸ்தான கேதுவால் தொழில் வளம் சிறப்பாக அமையவும் இல்லத்து பூஜையறையில் விநாயகரை வைத்து வழிபடுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பொது மருத்துவமனையில் நெஞ்சறை சத்திர சிகிச்சை முன்னெடுப்பு

(மன்னார்)

"நெஞ்சறை" சத்திர சிகிச்சை, வசதிகள் இல்லாத மன்னார் மருத்துவமனையில் வெற்றிகரமாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி வியாழன் இரவு 8.30 மணியளவில் மன்னார் பொது மருத்துவ மனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கு 35 வயது இளைஞர் ஒருவர் வலது பக்க நெஞ்சு பகுதியில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் நெஞ்சிலே ஏற்பட்ட பாரிய கத்தி குத்தினால் நெஞ்சுக் குழியினுள் ஏற்பட்ட தொடர் குருதிப்பெருக்கை நிறுத்த நெஞ்சுக்கூட்டை திறந்து சத்திரசிகிச்சை மேற்கொண்டு மன்னார் பொது மருத்துவ மனையில் இளைஞர் ஒருவரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

பொது சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் எம். மதுரகீதன் தலைமையிலான சத்திர சிகிச்சை அணியும் உணர்விழப்பியல் மற்றும் அதி தீவிர சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஜூட் பிரசாந்தன் தலைமையிலான உணர்விழப்பு அணியும் இணைந்து நெஞ்சுக் கூட்டை திறந்து உள்ளே தேடி குருதி பெருக்கை கட்டுப்படுத்தும் சத்திர சிகிச்சை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

சி.ரி ஸ்கான் மற்றும் நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணத்துவ வசதி கொண்ட பெரிய மருத்துவமனைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படும் இந்த சத்திர சிகிச்சை அந்த வசதிகள் இல்லாத மன்னார் மருத்துவ மனையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது மிகவும் சிறப்பான விடயமாக கருதப்படுகிறது. (நி-5-6-285)

# மரக்கடத்தல், மண் அகழ்வுடன் தொடர்புடைய மூவர் கைது

## 14 முதிரை மரக்குற்றிகளும் மீட்பு



(தருமபுரம்)

புதுக்குடியிருப்பு பகுதியில் சட்டவிரோதமான முறையில் பெறுமதி மிக்க 14 முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற கப்ரக வாகனத்தையும் அதில் பயணித்த இருவரையும் அதே பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்தையும் அதன் சாரதியையையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த இரண்டு கைது நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6-316)

# ஆனைவிழுந்தான் வயல் காணிகளை மீளப் பெற்றுத் தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்துக்குட்பட்ட ஆனைவிழுந்தான் குளத்தின் கீழ் உள்ள வயல் காணிகளை தமக்கு மீள பெற்று தருவதாக வாக்குறுதிகள் மாத்திரம் வழங்கப்படுகிறதே தவிர இதுவரை காணிகள் பெற்று தரப்படவில்லை என குறித்த பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனைவிழுந்தான் குளத்தின் கீழான பகுதிகளில் குடியேற்றம் செய்யப்பட்டதுடன் அவர்களுக்கான தலா இரண்டு ஏக்கர் வயல் காணிகள் வீதம் வழங்கப்பட்டிருந்தது.

2011 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேறிய பின் துப்பரவு செய்து பயிர்செய்ய முயற்சி செய்த போது வனவளத்திணைக்களத்தினால் குறித்த காணிகள் ஒதுக்கு பிரதேசங்களாக எல்லையிடப்பட்டிருந்தன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமது வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு இந்த வயல்க் காணிகளை உரிய அதிகாரிகள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு குறித்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-315)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2935

**மிர்ஷிகா**

இந்த period முழுக்க நீ வெளியில நில்லு அப்போ தான் உனக்கு அறிவு வரும்...



அப்போ நீங்க பாடம் சொல்லி கொடுத்தா அறிவு வராதா ரீச்சர்..

**சுபஷ்த்திகா**

சம்பளம் வாங்கின உடனே கடனெல்லாம் அடைச்சிட்டு நம்மகிட்ட இருக்கிற மிச்சத்த பார்த்தா, அடுத்து யாருகிட்ட கடன் வாங்கலாம்னு யோசிக்க வேண்டியதா இருக்கு...



**ஜெறோமி**

உலகத்துல பெண்களுக்கு ரொம்ப பொறுமை அதிகம்யா.



ஆமா, போட்ட சீரியலே எத்தன தடவை போட்டாலும் பார்க்குறாங்க..!

**டிபிசன்**

தினமும் உன்னை கும்பிட்டு தான் போறேன்... அப்புறம் ஏன் எனக்கு இவ்வளவு கஷ்டத்தை கொடுக்கிறாய்?




எது? என் கோவில cross பண்ணும் போது உன் கைக்கு நீயே முத்தம் கொடுத்துப்பியே அதுவா...

**சியானி**

Wife : நான் ஊருக்கு போய்ட்டா சாப்பாட்டுக்கு என்னங்க பண்ணுவீங்க ☹

Hus: சாப்பாடு கெடக்குது சாப்பாடு.. மனுசனுக்கு நிம்மதி தான் முக்கியம்.



**கஜன்**

வரவு என்பது கண்ணீர் போல ஒரே இடத்தில தான் வருது... செலவு என்பது வியர்வை போல எங்கிருந்தெல்லாமோ வருது...



ஆத்தி! நம்மளையும் மாத கடைசியில இப்பிடி புலம்ப வைச்சிருச்சே...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 306





அநிருத்தப் பிரமராயர் "ஆகா! பொன்னியின் செல்வரிடம் அப்படி என்னதான் ஆகர்ஷண சக்தி இருக்குமோ, தெரியவில்லை! அவரை ஒரு முறை பார்த்தவர்கள்கூடப் பைத்தியமாகி விடுகிறார்களே!" என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

பிறகு, உரத்த குரலில், "எங்கே? அந்த முரட்டு வைஷ்ணவனை இங்கே வரச் சொல்லுங்கள்!" என்று கட்டளையிட்டார்.

**பன்னிரண்டாம் அத்தியாயம்**
**குருவும் சீடனும்**

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை இக்கதையைப் படித்து வரும் வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். திருச்சிராப்பள்ளி ஜில்லாலால்குடி தாலுகாவில் அன்பில் என்ற பெயர் கொண்ட கிராமம் ஒன்று இருக்கிறது. இதை வடமொழியாளர் 'பிரேமபுரி' என்று மொழிபெயர்த்துக் கையாண்டிருக்கிறார்கள். (இந்த அத்தியாயம் எழுதப்பட்டது 1951இல்) இன்றைக்குச் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கிராமத்தில் ஒரு வேளாளர் தம்முடைய பழைய வீட்டை இடித்துப் புதுப்பித்துக் கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டினார். அப்போது ஓர் அதிசயமான வஸ்து பூமிக்கடியிலிருந்து அகப்பட்டது. பல செப்புத் தகடுகளை நுனியில் துவாரமிட்டு வளையத்தினால் கோத்திருந்தது. அந்தத் தகடுகளில் ஏதோ செதுக்கி எழுதப்பட்டிருந்தது. இரண்டு ஆள் தூக்க முடியாத கனமுள்ள அந்தத் தகடுகளை அவர் சில காலம் வைத்திருந்தார். பிறகு அந்தக் கிராமத்துக் கோயிலைப் புதுப்பித்து திருப்பணி செய்யலாம் என்று வந்த ஸ்ரீஆர். எஸ்.எல். லக்ஷ்மண செட்டியார் என்பவரிடம் அத்தகடுகளைக் கொடுத்தார். ஸ்ரீ லக்ஷ்மண செட்டியார், அத்தகடுகளில் சரித்திர சம்பந்தமான விவரங்கள் இருக்கலாம் என்று ஊகித்து அவற்றை எடுத்துக் கொண்டு போய் மகா மகோபாத்தியாய சுவாமிநாத ஐயர் அவர்களிடம் தந்தார். ஐயர் அவர்கள் அச்செப்பேடுகளில் மிக முக்கியமாக விவரங்கள் இருப்பதைக் கண்டு அந்த நாளில் சிலாசாஸன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீடி.ஏ. கோபிநாத ராவ், எம்.ஏ. என்பாரிடம் அத்தகடுகளைச் சேர்ப்பித்தார். ஸ்ரீகோபிநாதராவ் அச்செப்புத் தகடுகளைத் கண்டதும் அருமையான புதையலை எடுத்தவர் போல் அகமகிழ்ந்தார். ஏனென்றால், சோழ மன்னர்களின் வம்சத்தைப் பற்றிய அவ்வளவு முக்கியமான விவரங்கள் அச்செப்பேடுகளில் செதுக்கப்பட்டிருந்தன.

சுந்தரசோழ சக்கரவர்த்தியின் 'மான்ய மந்திரி'யான அன்பில் அநிருத்தப்பிரமராயருக்குச் சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த நாலாம் ஆண்டில் அளித்த பத்து வேலி நில சாஸனத்தைப் பற்றிய விவரங்கள் அந்தச் செப்பேடுகளில் செதுக்கப்பட்டிருந்தன. இந்த நில சாஸனத்தை எழுதிய மாதவ பட்டர் என்பவர் சுந்தர சோழர் வரைக்கும் வந்த சோழ வம்சாவளியை அதில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் அநிருத்தப் பிரமராயரின் வைஷ்ணவ பரம்பரையைக் குறிப்பிட்டு, அவருடைய தந்தை, தாயார், பாட்டனார், கொள்ளுப் பாட்டனார் ஆகியவர்கள் ஸ்ரீரங்கநாதரின் ஆலயத்தில் செய்து வந்த சேவையைக் குறித்தும் எழுதியிருந்தார். இதற்கு முன்னால் அகப்பட்டிருந்த ஆனைமங்கலச் செப்பேடுகள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், ஆகியவற்றில் கொடுத்திருந்த சோழ வம்சாவளியுடன் அன்பில் செப்பேடுகளில் கண்டது பெரும்பாலும் ஒத்திருந்தது. எனவே, அந்தச் செப்பேடுகளில் கண்டவை சரித்திர பூர்வமான உண்மை விவரங்கள் என்பது ஊர்ஜிதமா யிற்று. மற்ற இரண்டு செப்பேடுகளில் காணாத இன்னும் சில விவரங்களும் இருந்தபடியால் "அன்பிற் செப்பேடுகள்" தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சித் துறையில் மிகப் பிரசித்தி அடைந்தன.

எனவே, அநிருத்த பிரமராயர் என்பவர் சரித்திரச் செப்பேடுகளில் புகழ் பெற்ற சோழ சாம்ராஜ்ய மந்திரி என்பதை மனத்தில் வைத்துக்கொண்டு மேலே கதையைத் தொடர்ந்து படிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## பிஞ்சு மன ஓலம்

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்
ஈழத்து மைந்தர்களே இவ்வுண்மை அறிந்திடுவீர்
சோகமது வைத்தாலும் சோர்ந்திடாது நின்றிடுவீர்
சொந்தங்களை காக்க சோம்பல் என்றும் ஆகாது.

சிறுவர்களது எதிர்காலத்தை ஒளிமயமாக்குவோம்
சிறுமை எதிர்த்து போராடுவோம்
சிந்தித்துப் பாருங்கள் மனிதர்களே -நாம்
சிறப்புடன் வாழ வழி தாருங்கள்

கல்விதனை இழந்து கலங்கி நிற்கின்றோம்
காயப்பட்ட நெஞ்சோடு கண்ணீர் வடிக்கின்றோம்
சொல்லவோ முடியவில்லை துயரம் துடைத்தெறிய
சோர்வின்றி வருவீரா? சுமைப்பாரம் குறைப்பீரா?

பிஞ்சுகளை வதைத்து பெரியசுபம் காண்பீரோ
பேதமை விட்டு ஒரு பெருமை தான் தேடீரோ
மிஞ்சி நிற்கும் துயர்துடைத்து மீளவழி காட்டீரோ
அஞ்சினோம் அபயம் ஆண்டவனே துணை வா நீ.

மு.லக்ஸனா
தரம் 5B

**படிக்க நேரத்தை ஒதுக்கு அது அறிவின் கண்**

## விடுகதைகள்

கையிலே அடங்குவார், கதைநூறு சொல்வார் அவர் யார்?
புத்தகம்

தேடாமல் கிடைக்கும் பல் - தேடும் செல்வத்தைக் குறைக்கும் பல் அது என்ன?
சோம்பல்

நம்மோடு பிறந்து வளர்ந்து நம்மோடு மடிவான் அது என்ன?
வயது

தன்னை அழுக்காக்கி தான் இருக்கும் இடத்தை அழகுபடுத்துகிறான் அவன் யார்?
துடைப்பம்

இதுவரையில் இல்லாதது எப்போதும் இருப்பது யாரும் பாராதது அது என்ன?
நாளைய தினம்

ஆவணி பிறப்பது எதனால்? நாடகம் முடிவது எதனால் அது என்ன?
ஆடி முடிவதால்

முச்சந்தியில் மூன்று விளக்கு. பார்த்து நடந்தால் பாதுகாப்பு அது என்ன?
சமிஞ்கை விளக்கு

ஓர் எழுத்து பறக்கும் அது என்ன?
ஈ

சி.உதர்சன்
தரம் 5A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வெற்றி என்பது ஒரு மனிதன் பின்பற்றும் சத்தியத்தைப் பொறுத்தது.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூனியைத் தண்டிக்க வேண்டுமென தசரதர் ஒருபோதும் நினைத்ததில்லை

இலங்கை இந்தியாவின் ஒரு மாநிலம் போன்றது. பாக்கு நீரிணைப் பிரிப்பைத் தவிர மிகக் கிட்டிய தூரத்தில் இருக்கக்கூடிய இந்தியாவுடன் இலங்கை மிக நெருக்கமான உறவைப் பேணுவது மிகவும் அவசியமானது.

அதாவது இரு நாட்டு உறவு என்பது வர்த்தகத்தை மட்டும் மையப்படுத்தியதல்ல.

மாறாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம், மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள அபரிதமான வளர்ச்சி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கையும் தன்னை வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இருந்தும் இந்தியா, இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவான நாடு என்ற மனக் கிலேசத்தில் இந்தியாவுடனான இலங்கையின் உறவு என்பது வழுவழுத்ததாகவே இருந்து வருகிறது.

எனினும் இலங்கையின் இரட்டை வேடத்தை இந்தியா நன்கு அறியுமாயினும் அதுபற்றி அந்த நாடு அதிகம் அலட்டிக் கொள்வ வில்லை.

அதற்குக் காரணம் இலங்கை மிகச்சிறிய நாடு. இந்தியாவின் ஒரு மாநிலத்தோடு ஒப்பிட்டால் கூட, இலங்கையின் பரப்பளவும் மக்கள் தொகையும் கிட்டவும் நெருங்க முடியாது.

இதுதவிர, இலங்கை சிறிய நாடு என்பதை விட, வறிய நாடு என்ற புரிதல் இந்தியாவிடம் கனதியாக உள்ளது.

இதன் காரணமாகவே இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போதெல்லாம் இந்தியா தன்னால் முடிந்த உதவிகளை இலங்கைக்கு வழங்கி வந்துள்ளது.

ஆனாலும் இந்தியா செய்த பேருதவியை இலங்கை பொருட்படுத்தியதாகத் தெரிய வில்லை.

மாறாக சீனாவை நேசிப்பதிலேயே இலங்கை பெருவிருப்புக் கொண்டுள்ளது. இந்த உண்மையை இந்தியா நன்கு உணருமாயினும் ஒரு சிறிய நாடு ஏனைய நாடுகளுடன் நட்புப் பாராட்டுவதில் குற்றம் கண்டு விடலாகாது என்ற பெருந்தன்மையுடன் இந்தியா நடந்து கொள்கிறது.

இங்குதான் இலங்கை தசரதரின் அரண்மனையில் கைகேயின் தோழியாக இருந்த கூனியின் வேலையைச் செய்யத் தலைப்பட்டுள்ளது.

ஆம், இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் நடப்பதைத் தடுப்பதில் தீவிரம் காட்டிய மந்தரை எனும் கூனி தசரதச் சக்கரவர்த்தியின் இராஜகுடும்பத்தோடு இருந்து வாழுகின்ற அருமந்த வாய்ப்புக் கிடைத்ததை ஒருபோதும் நினைத்திலாள்.

அவளின் நினைப்பெல்லாம் இராமருக்குப் பட்டாபிசேகம் நடக்கக்கூடாது என்பதுதான்.

அதேபோலத்தான் இந்தியாவின் விடயத்தில் இலங்கையின் நிலைப்பாடும் உள்ளது.

அந்தச் சூழ்ச்சிதான் சீனாவின் கப்பலுக்கு இலங்கை வழங்கிய அனுமதி.

பரவாயில்லை, கூனியைத் தண்டிக்க வேண்டுமென தசரதர் ஒருபோதும் நினைத்த தில்லை.

ஆனால் இலங்கை விடயத்தில் இந்தியா தசரதராக இருக்காது என்பதை மட்டும் கூனிக் குணமுடைய சிங்கள ஆட்சியாளர்களுக்குச் சொல்லி வைத்தாக வேண்டும்.

# வரவு-செலவு திட்டத்தின் போது எதிராக வாக்களிக்க நேரிடும்

## அரசுக்கு மொட்டு எம்.பி எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் வரவு-செலவு திட்டத்தின் போது எதிராக வாக்களிக்க நேரிடும் என ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கதலைமையிலான அரசாங்கத்திற்கு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

மக்களை அழுத்தங்களுக்கு உள்ளாக்கும் வகையிலான வரவு - செலவுத் திட்டம் முன் வைக்கப்பட்டால்அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுன வர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில்அவர்இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,அரசாங்கத்திற்கு தேவையானவாறு தீர்மானங்கள் எடுக்க முடியாது.

தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டால் இந்த வரவு-செலவு திட்டம் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும்.

நாங்கள் சொல்வது கேட்காவிட்டால் நாங்கள் ஏன் இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாங்கள் கட்சி என்ற வகையில் ஸ்திரமான தீர்மானத்தில் நிற்போம் என பும்ரோகித அபேகுனவர்தன தெரிவித்துள்ளார். (நி-5-6)

# சட்டவிரோதமாக தமிழகம் சென்ற இலங்கையர் இருவர் கைது

(சென்னை)

மண்டபம் பகுதிகரையோரத்தினூடாக தமிழகத்திற்குள் ஊடுருவிய இலங்கையர்கள் இருவர் நேற்று கைது செய்யப் பட்டுள்ளனர்.

மண்டபம் முனைக் காடு கடற்கரையில் நேற்று முன்தினம் ஆளில்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பைப்பர் படகில் வந்த நபர்களை மரைன் பொலிஸார் தீவிரமாக தேடிவந்த நிலையில் மன்னார் பள்ளிமுனையை சேர்ந்த இருவர் சட்டவிரோதமாக இலங்கையில் இருந்து படகு மூலம் வந்து மண்டபம் அகதிகள் முகாமில் பதுங்கி இருந்தது தெரியவந்தது.

இந்நிலையில் நேற்று மரைன் பொலிஸார் இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இருவரும் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து படகு மூலம் இலங்கைக்கு சென்ற நிலையில் மீண்டும் அங்கிருந்து தமிழகம் வந்துள்ளது விசாரணையில் தெரிய வந்துள்ளது. (நி-5-6)

## ஜெனிவா செல்லும் அமைச்சர் ஜீவன்

(ஜெனிவா)

அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜெனிவாவுக்கு நேற்று புதன்கிழமை பயணம் மேற்கொண்டுள்ளார்.

உலக நாடுகளில் உள்ள தொழிற்சங்கங்கள் பங்கேற்கும் சர்வதேச தொழிற்சங்க மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜெனிவா சென்றுள்ளார். (நி-5-6)

## தரக்குறைவான மருந்துகளை
# கொள்வனவு செய்வதற்கு அரசாங்கமே பொறுப்பு
## சஜித் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்களை மரணப்படுக்கைக்கு இட்டுச் செல்லும் தரக்குறைவான மருந்துகளை வழங்குவதற்கு தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமும சுகாதார அமைச்சும் பொறுப்பு கூற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொள்முதல் மற்றும் பதிவுமுறைய ற்ற, தரம் குறைந்த ஐ.ஏ.வி.ஜ. என்ற மருந்துப்பொருட்கள் சட்டவிரோதமாக இந்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, இந்நாட்டில் பல நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது நேரடியாக நரம்புக்குள் செலுத்தப்படும் ஒரு மருந்து மற்றும் பிரதானமாக நரம்பியல் வலிக்கு பயன் படுத்தப் படுவதோடு, மேலதிகமாக இம்மருந்து மூட்டுகள் மற்றும் இதய நோய்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தொடர்புடைய வைத்திய நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த மோசடிக்கு ஜனாதிபதியே பொறுப்பு கூற வேண்டும். ஊழல் மிக்க சுகாதார அமைச்சரை இப்போதே ஜனாதி பதியால் நீக்க முடியும்.

ஜனாதிபதி அதை செய்ய மாட்டார். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த குற்றச் செயலில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதியை நிலை நாட்டப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# ஒரு செக்கன் கூட இந்திய இழுவைப் படகுகளுக்கு அனுமதியில்லை

## கடற்றொழில் அமைச்சர் உறுதி

(சாவகச்சேரி)

இந்திய இழுவைப் படகுகளுக்கு இலங்கையில் ஒரு செக்கன் கூட இடமில்லை இதுவே அரசாங்கத்தின் முடிவு என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சாவகச்சேரியில் கடற்றொழிலாளர் களுக்கு நன்கொடையாக எரிபொருள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகமேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் சிறிது காலமாக இந்திய இழுவைப் படகுகளின் வரவு குறைவாகக் காணப்படுகிறது. எமது கடற்றொழிலாளர்கள் இந்தியாவிற்கு படகில் சென்று தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர் ஆகியோரை சந்தித்து தமது நிலைமையை விளக்கப்படுத்தியதன் விளைவால் தான் இந்தியப் படகுகளின் வருகை குறைவடைந்துள்ளது.

இது இலங்கை கடற்படை சார்ந்த பிரச்சினை அல்ல. இது வடக்கில் வாழும் தமிழ் கடற்றொழிலாளர்களுடைய பிரச்சினை.

எமது கடற்படை அத்துமீறும் இந்திய மீன்பிடிப் படகுகளை பிடிக்கும் போது அங்கே கடற்படை சார்ந்து ஓர் பிரசாரம் முன்வைக்கப்படுகிறது. உண்மையில் அவர்கள் சட்டவிரோதமாக எமது வளங்களையும் வாழ்வாதாரங்களையும் அழிக்கும் போது தான் கடற்படை அவர்களை கைது செய்கின்றது.

இந்திய இழுவைப் படகு விடயத்தில் கடற்றொழில் அமைச்சராக எனது முடிவே இறுதி முடிவு. ஒரு செக்கன் கூட இந்திய இழுவைப் படகுகளுக்கு இங்கு இடமில்லை. இதுவே அரசாங்கத்தின் முடிவு என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-5-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

09



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பெருந்துரோகம் இழைத்ததன் மூலம், அன்றிலிருந்து கண்டியின் எதிரி என்ற பதவியைப் போர்த்துக் கேயரிடமிருந்து பறித்து, தன் வசம் தக்க வைத்துக் கொண்டது, டச்சுப் படை.

இத்தகைய குழப்பங்களாலும் இராஜசிங்கனுக்கெதிராக கண்டி யில் எழுந்த கிளர்ச்சிகள் தீவிர மடைந்திருந்தன. இத்தனைக்கும் மத்தியில் அவனால் தன் ஆட்சி யைத்தக்க வைத்துக் கொள்ள முடிந்தது என்பதுடன், தலதாமாளி கையின் ஒரு மாடியும் அவனால் திருப்பணி செய்யப்பட்டது.

இராஜசிங்கனின் மிகப் பெரிய சாதனையே இலங்கையிலிருந்து போர்த்துக்கேயரை அகற்றியது தான். அதன் எதிர்விளைவாக, இலங்கையில் ஒல்லாந்தர் குடி யேறினாலும் போர்த்துக்கேயருடன் ஒப்பிடும்போது, மத-பண்பாட்டு களிலான தலையீடு, ஒல்லாந்தரால் குறைவாகவே இருந்தது. கண்டிக் குள் ஏற்பட்ட குழப்பநிலை, இராஜ சிங்கனின் ஆட்சிக்கு பல தடவை கள் அச்சுறுத்தலாக மாறினாலும் அவை எல்லாவற்றையும் அவன் தன் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். பிற்காலத்தில், கண்டி அரசியலில் மாபெரும் சக்திகளாக மாறிய பல குடும்பங்கள், இவன் காலத்தில் தலையெடுத்தவை தான். இவன் ஆட்சிக் காலத்தி லேயே, 1640 இல் டச்சுக்களின் வசமிருந்த திருகோணமலை கோட்டைப் குதியில் உலவிய கண்டிப் படை, ரொபர்ட் நொக்சை சிறைப்பிடித்ததுடன், இலங்கையின் பண்டைச் சிறப்பைக் கூறும் புகழ் பெற்ற நூலொன்றை (ரொபர்ட் நொக்ஸ்) எழுதுவதற்கு, அச்சிறை வாசம் மூலம் வாய்ப்பளித்தது.

### இரண்டாம் விமலதர்ம சூரியன் (1687-1707)

இரண்டாம் விமலதர்மசூரியன் கண்டி இராச்சியத்தின் அரசனாக இருந்தவர். இவரது தந்தை இரண் டாம் இராஜசிங்கனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர். யோசப் வாசு அடிகளை கண்டி இராச்சியத்தில் தங்கியிருக்கவும் கிறிஸ்தவ வழி பாடுகளை நடத்தவும் அனுமதி அளித்தவர்.

அவரது குழந்தைப் பருவத்தில், ஒரு உன்னதமான கண்டிய குடும் பத்தைச் சேர்ந்த அரச சபையில் உறுப்பினராக இருந்த அம்பன் வெலராலா, இரண்டாம் இராஜ சிங்கனுக்கு எதிராக ஒரு கிளர்ச் சிக்கு தலைமை தாங்கினார். கிளர்ச்சியாளர்கள் பட்டத்து இள வரசர் விமலதர்மசூரியவை அவ ரது தந்தைக்கு எதிராக பயன்படுத்த முயன்றனர்.

ஆனால் அந்தநேரத்தில் "அம்மா ராணி (Mother Queen)" பத வியில் இருந்த அவரது தந்தை வழி அத்தை சாமாதேவி அவரை கிளர் ச்சியாளர்களிடமிருந்து மீட்டு அரச ரிடம் அழைத்துச் சென்றார். கிளர்ச்சி யாளர்களிடமிருந்து காப்பாற்று வதற்காக இரண்டாம் ராஜசிங்கன் அவரை மறைத்தார்.

எனவே விமலதர்மசூரிய சிறு வயதில் நீண்டகாலம் பிக்கு ஒரு வரால் வளர்க்கப்பட்டார். சிறுவயது முதலே ஒரு பௌத்தத் துறவியாக நீண்டகாலம் வளர்க்கப்பட்டமையால் இவர் இயற்கையாகவே அமைதி யைப் பேணுபவராக இருந்தார். பர்மாவில் இருந்து 33 பௌத்த துறவிகளை வரவழைத்து பௌத்த உயர்பீடம் ஒன்றை அமைத்தார்.

1687 ஆம் ஆண்டில், இரண்டாம் ராஜசிங்கன் தனது ஆட்சி முடிவ டைவதை உணர்ந்தார். அவர் ஹுங்குரன் கெத்த என்ற இடத்தில் தனது மந்திரிகளின் கூட்டத்தைக் கூட்டி, அவருக்குப் பிறகு அரிய ணையில் அமர்வதற்கு விதிக்கப்பட் டிருந்த தனது மகன் இளவரசர் மஹாஸ் தானாவுக்கு அவர்களை அறிமுகப்படுத்தினார். ஆச்சரியமாக இருந்தாலும் அமைச்சர்கள் எந்த சந்தேகமும் தெரிவிக்கவில்லை. அமைச்சர்கள் இளவரசர் மஹாஸ் தானை புதிய அரசராக அதிகார பூர்வமாக அங்கீகரிப்பதற்கு முன், இரண்டாம் ராஜசிங்கன் தனது மகன் முன் பணிவுடன் மண்டி யிட்டு, தனது விசுவாசத்தை உறுதிய ளித்ததாகக் கூறப்படுகிறது.

டிசெம்பர் 10 ஆம் திகதி, இளவரசர் மஹாஸ்தானா கண்டியின் அரிய ணையில் ஏறியதை டச்சு அதிகா ரிகளுக்கு தெரிவிக்க இரண்டு தூதர் கள் கொழும்பு சென்றனர். இந்தச் செய்தி மிகப்பெரிய மகிழ்ச்சியை டச்சுக்காரர்களுக்கு கொடுத்தது. இது பரவலான கொண்டாட்டங்களுக்கும் அடிமைகளை விடுவித்தல் மற்றும் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங் குதல் போன்ற கருணைச் செயல் களுக்கும் வழிவகுத்தது.

ஐந்து நாட்களுக்குப் பிறகு, இரண் டாம் இராஜசிங்கன் காலமானார். மற்றும் அதைத் தொடர்ந்து தகனம் செய்ததைப் பற்றிய சோகமான செய்தியை வழங்க கூடுதல் தூதர் கள் கொழும்பு சென்றனர். டச்சு இலங்கையின் 12 ஆவது ஆளுநரான லாரன்ஸ்வான் பைலுடன் தனது மகன் நட்புறவைப் பேண வேண் டும் என்ற ராஜசிங்கன் II இன் இறுதி விருப்பத்தையும் அவர்கள் தெரிவித்தனர்.

விமலதர்மசூரியன் II தனது தந் தையின் அடிச்சுவடுகளைப் பின் பற்றி, திருமணத்தின் மூலம் மதுரை நாயக்கர் குலத்துடன் தொடர்பைப் பேணி வந்தார். சூளவம்சத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளபடி, அவர் தனது தந்தையின் ராணி மனைவியின் மகளை மணந்து அவளை தனது ராணியாக நிய மித்தார். அவரது ராணி மனைவி மட்டுமல்ல, அவருக்கு நாயக்கர் குலத்தைச் சேர்ந்த பல ஆசை நாயகிகள் இருந்தனர். ஆனால் அந்த மனைவிகள் எவராலும் அரி யணைக்கு ஒரு வாரிசை கூட உரு வாக்க முடியவில்லை.

எனவே அவர் வத்தேகம முத் துக்குடே வளவையில் வாழ்ந்த உள்ளூர் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த இளவரசியை மணந்தார். இந்த அரச துணைவி முத்துக்குடே தேவி என்று அழைக்கப்பட்டாள். அவளால் ஒரு மகனைப் பெற்றெ டுக்க முடிந்தது. பின்னர் அவர் மன்னரின் வாரிசான வீரநரேந்திர சிங்கன் ஆனார். மேலும் வரலாற்று ஆதாரங்களின்படி, அவருக்கு கிராவெல்லே அரச குலத்தைச் சேர்ந்த ஒரு துணைவி இருந்தாள், அவர் மன்னரின் மற்றொரு மக னான பட்டிய பண்டாரவின் தாயா வார்.

வரலாற்று ஆதாரங்களின் படி, நரேந்திரசிங்கனின் தந்தையின் மற்ற மனைவிகள் இவர் மீது பொறாமை கொண்டனர். எனவே அவர்கள் மகாவலி ஆற்றின் குறு க்கே லைவெல்ல படகு மூலம் பய ணம் செய்யும் போது நரேந்திர சிங்கனையும் அவரது தாயையும் கொல்ல சதி செய்தனர். ஆனால் அருகில் சென்ற வாலிபர் ஒருவர் இருவரையும் காப்பாற்றினார்.

இச்சம்பவத்திற்குப் பிறகு இரண் டாம் விமலதர்மசூரிய மன்னன் தனது அன்பு மகனைப் பாதுகாப்பிற் காக குண்டசாலை அரண்மனை யில் வைத்திருந்தான். இதனால் அவர் இளவரசர் குண்டசாலை என்று அழைக்கப்பட்டார். இளவரசர் குண்டசாலை தனது இளம் வயதில் விளையாட்டுத்தனமான பையனாக இருந்தார்.

இளவரசர் குண்டசாலை அவரது தந்தையின் ராணிமனைவியால் அவருக்கு அரியணைக்கான சட்ட பூர்வ உரிமையை வழங்குவதற் காக தத்தெடுக்கப்பட்டார். அவர் சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்ட போது, அரச சபையின் சில உறுப் பினர்கள் உடன்படவில்லையென் றும் அவர்கள் இளவரசர் பட்டியா பண்டாரவுக்கு அரியணையைக் கொடுக்க முயன்றனர் என்றும் வரலாறு கூறுகிறது.

இரண்டாம் விமலதர்மசூரிய மன்னனின் பதவிக் காலத்தில் இலங்கையின் டச்சு ஆட்சியாளர் கண்டி அரசைக் கைப்பற்ற பல வழிகளிலும் முனைந்து தோற்ற னர். ஆனாலும் கண்டி இராச்சியத்தின் வெளிநாட்டு வணி கத்தை டச்சு வணிகர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

### வீரநரேந்திரசிங்கன் (1707-1739)

வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் கண்டி இராச்சியத்தின் கடைசி சிங்கள அரசன் ஆவார். தந்தை இரண்டாம் விமலதர்மசூரியனின் இறப்பிற்குப் பின்னர் தனது 17 ஆவது அகவையில் ஆட்சிக்கு வந்து 32 ஆண்டுகள் கண்டி இராச்சிய மன்னராக இருந்தார்.

வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் தனது தந்தையைப் போன்றே சமயப்பற்று மிக்கவராக இருந்தார். இலங்கையின் டச்சு ஆட்சியாளர் களுடன் அமைதியைப் பேணி வந்தார். இலக்கியம் மற்றும் சமயத்தில் அதிக ஆர்வம் காட் டினார்.

தென்னிந்தியாவின் மதுரை நாயக்க குடும்பத்தில் இருந்து இரு பெண்களை மணந்து கொண்டார். இவர்களுக்குப் பிள்ளைகள் எவ ரும் பிறக்கவில்லை. அத்துடன் மாத்தளையைச் சேர்ந்த பிரபுக் குடும்பம் ஒன்றில் பிறந்த இன்னும் ஒரு பெண்ணையும் மணந்து கொண்டார். அவளுக்குப் பிறந்த குழந்தை சிறுவயதிலேயே இறந்து விட்டது.

வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படி நரேந்திரசிங்கன் பல திரு மணங்களைச் செய்தார். அவரது ராணி மனைவி மதுரை நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த இளவரசி ஆவாள். பிட்டிநாயக்கர் மற்றும் பெண் அபிராமிதேவியின் மக ளான இவள் பிரமிளாதேவி என்று அழைக்கப்பட்டார்.

மன்னரின் நெருங்கிய தோழ ரான இரண்டாம் அடிகளார் தாச னுடன் இவளுக்கு ரகசிய தொடர்பு இருந்தது தெரிந்தது. இது பொது மக்களுக்கு தெரிய வந்ததும் தாசனின் தலையை துண்டிக்க அரசரால் உத்தரவிடப்பட்டது.

நரேந்திரசிங்கனுக்குப் பிள் ளைகள் எவரும் இல்லாததால் அவருக்குப் பின்னர் மனைவியின் சகோதரன் நாயக்க வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீவிஜயராஜசிங்கன் ஆட்சியேறினார். அதன் பின்னர் கண்டி இராச்சியம் பிரித்தானியரால் 1815 இல் கைப்பற்றப்படும் வரை சிங்களவர்கள் எவரும் ஆட்சி யேறவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டோ உரிமை...

யாழ்ப்பாண மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர் நேற்றையதினம் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

அண்மைய நாட்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இணைய செயலி மூலம் முச்சக்கரவண்டி சேவையினை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக தாம் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாகவும் அதனை நிவர்த்தி செய்யுமாறு கோரியுமே இப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை பண்ணையில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமான பேரணி, யாழ். நகரில் உள்ள வீதி வழியாக வருகை தந்து இறுதியில் கடற்றொழில் அமைச்சரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்து நிறைவு பெற்றது. (ம-7,33,104)

## துவிச்சக்கர...

நிலையில் கடந்த சனிக்கிழமை வேறொரு நபர் துவிச்சக்கரவண்டியில் ஏற்றி பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்றபோது வழியில் தவறிவீழ்ந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முச்சக்கர வண்டியில் குறித்த நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று புதன்கிழமை யாழ்.போதனா வைத்திய சாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஜெய்சங்கரை...

சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் இரவு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

இவ்வாறான சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட வடக்கின் ஏனைய கட்சிகளும் தெற்கின் சில தமிழ்க் கட்சிகளும் எஸ்.ஜெய்சங்கரை சந்திக்க நேரத்தை கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7)

## 10 ஆயிரம்...

முக்கிய சந்திப்புகளில் ஈடுபட்டதுடன், ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் ஆரம்பமாகவே 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இலங்கை சார்பில் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்தியா சார்பில் கையொப்பமிட்டார்.

அத்துடன், இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள 126 வீடுகள், நிகழ்நிலை ஊடாக திறந்து வைக்கப்பட்டு, பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பதுளை, மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலேயே மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## காங்கேசன்துறை...

கின்றன.

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையில் நேற்றுமுன்தினம் 10ஆம் திகதி பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்க இருந்த நிலையில், கப்பல் போக்குவரத்து இன்று 12ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் குறித்த திகதி மீண்டும் மாற்றப்பட்டு ஒக்ரோபர் 14ஆம் திகதி காலை 7 மணிக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய அமைச்சர்கள் கூடுதலாக நிகழ்ச்சியில் பங்கேற்க இருப்பதால் திகதி மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மத்திய துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்து மற்றும் ஆயுஷ் துறை அமைச்சர் சர்பானந்த சோனாவால, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்க வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## கோழியிறைச்சி...

குள் குறைக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, 1250 ரூபா வரையில் தற்போது விற்பனை செய்யப்படும் கோழி இறைச்சியின் விலையை டிசம்பர் மாதமளவில் 850 ரூபாயுக்கு விற்பனை செய்ய முடியும் என எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கோழி இறைச்சி, முட்டை, கருவாடு மற்றும் மீனின் விலைகள் அதிகரித்திருந்தமையால், நாட்டில் போஷாக்கு தொடர்பான பிரச்சினை ஏற்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## வாக்குறுதிகளை...

வரன் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

குறித்த கடிதத்தில், ஜெர்மன் பத்திரிகையாளருக்கு ஜனாதிபதி அளித்த நேர்காணல் மூலம் வெளிநாடுகளில் பெற்றிருந்த வெற்றிகள் அனைத்தும் களங்கப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் ஊடாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கடும்போக்கு சிங்களவர்களின் வாக்குகளை உறுதிப்படுத்திய போதிலும் சிங்களவர்கள் அல்லாதவர்களின்வாக்குகளை இழக்கலாம் எனவும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் வாக்குகள்தேவையில்லாவிடில், தங்களிடம் அதனை கூறுமாறும் குறித்த கடிதத்தில் சி.வி.விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில், தமிழர்கள் பொதுவான தமிழ் வேட்பாளரை நியமிப்பது பற்றி சிந்திப்பதாகவும்அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியினால் உறுதியளிக்கப்பட்ட பல விடயங்கள் நடைமுறைக்கு வரவில்லை என தெரிவித்துள்ள சி.வி.விக்னேஸ்வரன், அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை அமுல்படுத்தக் கூடிய ஆலோசனைக்குழு இதுவரை நியமிக்கப்படவில்லை எனவும் குறித்த கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

# சிறுமி கொலை மூவர் கைது

(கொழும்பு)

மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்துக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு உதவி வழங்கிய மூவர் பொலிஸ் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றுக்கு அருகில் முச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் காயமடைந்தார்.

இந்தநிலையில் குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் 36 முதல் 62 வயதுக்கு இடைப்பட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இறக்காமம் மற்றும் ராஜகிரிய ஒபேசேகரபுர பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2023/10/11
சீட்டிழுப்பு இலக்கம் 5264
R 4 9 3 1 4 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3506
சீட்டிழுப்பு திகதி 11.10.2023
P 01 16 61 71
P 02143
தேசிய லொத்தர் சபை

Lucky 7
திகதி 11.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0090
L7 இலக்கம் 3 7
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 7 8 9 7 6 9

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.10.11
சீட்டிழுப்பு இலக்கம் 573
மீனம் 08 10 39 40 மீனம்
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.10.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1294
Z 11 24 46 48 Z
Double Chance 34545

மெகா பவர்
திகதி 11/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1612
P 24 26 42 55 70
Double Chance 69280

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2238 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.10.11 தினம் புதன்கிழமை
21 46 59 73 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00
DLB

சனிதா
திகதி 2023.10.11 வெற்றி வாரம் 4399 வர்ணம் இளம் நீலம்
02 38 39 61 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,283,120.00
94074
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3950 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.10.11 தினம் புதன்கிழமை
18 40 49 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,751,536/-
838294 694
DLB

திகதி 11.10.2023 வெற்றி வாரம் 1414
S 19 02 24 46 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 450,736,774.20
145844 923
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
திகதி 2023.10.11 வெற்றி வாரம் 1964 வர்ணம் மஞ்சள்
17 18 61 66 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.46,506,731.20
DLB

அட கோடீபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2064
திகதி : 2023.10.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,912,968/-
05 20 36 43 M
199428
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17366)

076 825 7716 (ஆகாஸ்)

புனித சூசையப்பர் சர்வதேச திருமண சேவை

றோமன் கத்தோலிக்க சகல சமூகங்களின் மற்றும்
இந்து மக்களின் சமூகங்களுக்கான திருமண
இணைப்புக்களுக்கு
20 வருட அனுபவம் – உண்மை – நேர்மை
நேரடியான பதிவுகள் மட்டும்
Whatsapp
077 967 2462, 070 310 7250
உள்நாடு - வெளிநாடு
(17415)

## தொழில்நுட்பம்...

பெற்ற தேசிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக செயல்முறை முகாமைத்துவத் தொழில் கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இக்கண்காட்சி மூலம் நமது நாட்டிற்கு எவ்வாறு பயன் பெறுவது என்பதிலேயே நான் கவனம் செலுத்தினேன். இன்று வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புகின்ற தருணத்தில் நாம் இருக்கிறோம்.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவது மட்டும் போதுமானதல்ல. பெற்ற கடனை திரும்பச் செலுத்த வேண்டும். நமக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். அதற்கும் பணம் செலுத்த வேண்டும்.

அதற்கான அந்நியச் செலாவணி எம்மிடம் இல்லை. எனவே, நாம் மீண்டும் கடன் பெற வேண்டியேற்படும்.

நாம் கடன் சக்கரத்தில் தொடர்ந்து இருக்கப்போகின்றோமா அல்லது அதிலிருந்து வெளியேறி முன்னேறிச் செல்கிறோமா என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் எதிர்காலம் தொழில்நுட்பம் மற்றும் பசுமைத் துறை என்பவற்றில் தங்கியுள்ளது.

எனவே நாம் அதற்குள் செல்ல வேண்டும். நெல் விளைச்சல் வெற்றிபெறாதபோது, கறுவா விளைச்சலுக்கு சென்றோம்.

கறுவாவை இழந்தபோது கோப்பி பயிரிடப்பட்டது. கோப்பி இல்லாத காலத்தில் தேயிலை, இறப்பர் தென்னை ஆகியன பயிரிடப்பட்டன.

இப்போது நாங்கள் சுற்றுலாத்துறை மற்றும் ஆடைத் தொழில் செய்கிறோம். இவை அனைத்தும் கடந்த காலத்தைச் சேர்ந்தவை. ஆனால் நாம் எதிர்காலத்திற்கு செல்ல வேண்டும். இந்த நாட்டின் தேவையை விட இரண்டு மடங்கு மக்களை நாம் உருவாக்க வேண்டும். (ம-7)

விற்பனைக்கு

- 600Kg - பிளட்போம் தராசு
- 10 Kg TS 200 சாச்சர் உடன்
- SOLA TUB well pump with controller : 2'' - 1 1/4 (விவசாய தேவைக்கும் வீட்டுப் பாவனைக்கும் உகந்தது.)

(17423)

077 0777 365

வாழ்க வையகம் | குருவே துணை | வாழ்க வளமுடன்



முழுமை நல வாழ்விற்கான
மனவளக்கலை யோகா
Sky Yoga
தொடர்ச்சியான வாரப் பயிற்சி நெறிகள்
காலை : 6.00 - 8.00, 10.00 - 12.00
மாலை : 4.00 - 6.00
பங்குபற்றும் அனைவருக்கும் காலை, மதிய உணவுகள் வழங்கப்படும்.

- இலங்கை பேராசிரியர்களால் நடாத்தப்படும் ஆரம்ப நிலை Sky Yoga பயிற்சிகள்
- நோயின்றி வாழ + எளியமுறை உடற்பயிற்சி
- மனநலம் பெருக - தவமும் தற்சோதனையும்
- உயிர் வளம்பெருக்க - காயகல்பப் பயிற்சிகள்



(17422)

இடம்:யாழ் தவமையம்
வேதாத்திரி ஆன்மீக கல்வி நிலையம்
14/4, கோயில் வீதி, 1 ஆம் ஒழுங்கை,யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :
076 395 9293
077 088 2939

வேலைவாய்ப்பு

- வெப்மெசின் இயக்குநர் (அனுபவமுள்ளவர்கள்)
- வெப்மெசின் பயிலுனர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)

குறிப்பு :
சம்பளம் நேரில்
பேசித் தீர்மானிக்கப்படும்.
நேரில் வரவும்

076 097 3121

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 06 - 1942 | 10 - 10 - 2023 |

### பொன்னையா செல்லம்மா

ஆதித்தன் வளவு கோப்பாய் தெற்கு இருபாலையைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டம் இருபாலையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லம்மா அவர்கள் 10.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னன் தம்பதியினரின் அன்பு மகளும் கர்லஞ்சென்றவர்களான செல்லர் - சின்னாச்சியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லர் பொன்னையாவின் அன்பு மனைவியும் வரதகுலசிங்கம், தவமலர், தர்மகுலசிங்கம், சறோஜா, நல்லமலர், பஞ்சலிங்கம், குணசிங்கம், ரவீந்திரன், பிரியமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மாலினி, ஜெகநாதன், உதயகுமாரி, காலஞ்சென்ற இன்பராசா மற்றும் சிவானந்தசோதி, ஜெனிரதி, கலைச்செல்வி, துஷ்சாந்தி, சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மனோஜா, லக்சயன், லக்சுதன், ஜெறோசன், தமிழரசி, தினேஸ்கரன், சிந்துஜா, தர்மிகா, காருண்யா, கஜலி, ஆர்த்திகா, கிருஷாந், கிருஷிகா, அரவிந், அஷ்வினி, நிலக்ஷன், அக்ஷயா, குமரீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டியாஷினியின் அன்பு பூட்டியும் காலஞ்சென்றவர்களான பார்வதி, நாகம்மா மற்றும் ஐயாத்துரை, சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் இராசன், ஜெயதேவி, இராஜேந்திரம் அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.10.2023 வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொய்யாத் தோட்டம், இருபாலை.
077 711 0440
077 939 2019
(17417)
தகவல் : குடும்பத்தினர்

அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226244
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் (C-7414)
விண்ணப்ப முடிவு திகதி 07-11-2023
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!
0777068777 | 0768226240 | 0776699892 | 0777469777 | 0768226237 | 0768226242
0768226243 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 | 0764550675
0768226238 | 0764550671 | 0777718322 | 0777726322 | 0743900353 | 0777720322
0764550674
V2 Travels 0768226236


அலுவலக வேலை - பயிற்சி
2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7414)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777

## 18ம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### பொன்னுத்துரை சரவணபவன்

( ராசா – மண்டைதீவு 6 )

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1952.04.26 | 2005.10.01 |

திதி : அபரபக்க திரயோதசி

பாசமாய் எமைப் பெற்று – பக்குவமாய் வளர்த்தெடுத்து
பாரினிலே நாம் தலை நிமிருமுன்
பாதியிலே எமைவிட்டு
எங்குதான் சென்றாய் அப்பா...
சடுதியாய் சென்று நீயும் பதினெட்டு ஆண்டுகள்
வந்ததுவே அப்பாவே!
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் அவனியில்
நாம் வாழும்வரை அனுதினமும் நின் நினைவே
எம்முடனே தான் அப்பா! நின் ஆத்ம சாந்திக்காய்
நித்தம் தொழுகின்றோம் நாம் இங்கு.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

15, குளம்கரை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(17420)
அழியாத நின் நினைவோடு
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org